**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**------**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

Calender
Miscellaneous Case No. CC 23/2022
Priliminary Register
Sessions

Deposition of witness for Prosecution PW5
Defence
Court

| | |
|---|---|
| Name | :Dr.Ragava Ganeshan |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.06.2022.**

**முதல் விசாரணை:**

நான் இறுதியாக அரசு மருத்துவக்கல்லூாியில் சட்டம்சாா்ந்த மருத்துவத்துறையில் பயிற்சி ஆசிரியராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகின்றேன். நான் கடந்த 01.01.2010ம் தேதி பிற்பகல் 1.30மணிக்கு நான் பணியிலிருந்தபோது **திருநகா்** கா.நி.கு.எண்.01-2010 பிரிவு 279, 304(எ) இதச வழக்கில் வாகன விபத்தாகி இறந்துபோன 42 வயது மதிக்கத்தக்க விஜயா என்ற பெண்பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டி திருநகா் கா.நிலைய காவலா் 1115 முருகேசன் என்பவா் ஆஜராகி மேற்படி காவல் நிலைய ஆய்வாளா் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று பிரேத பரிசோதனை செய்தேன். எனது பிரேத பரிசோதனையில் உடல் நடுத்தர ஊட்டத்துடனும் கை கால் விரல் நகங்கள் ஊதா நிறத்திலும் இருந்தது. பிரேதத்தில் இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் கீழ்க்கண்டவாறு இருந்தன. 1. பின்தலையில் 6-4செமீ- எலும்பு ஆளத்தில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. வலது காலில் 4-2செமீ அளவில் ஒரு சிராய்ப்பு காயமும் வலது தோலில் 3-1செமீ அளவில் ஒரு சிராய்ப்பு காயமும் இருந்தது. தலையை அறுத்து ஆய்வு செய்ததில் பின்தலையில் 12-6செமீ அளவில் தலைத்தோலுக்கு அடியில் ஒரு கன்றிய காயமும் கபாலத்தின் பின்பகுதியில் 6செமீ அளவில் ஒரு எலும்பு முறிவும் பெருமூளையின் மேற்பகுதியில் மூளை சவ்விற்கு மேல் மற்றும் கீழ்பகுதியில் இரத்தக்கசிவுகளும் பின்புற மூளைபகுதியில் 4-2-1செமீ அளவில் சிதைந்த காயமும் மூளை அதன் வெட்டுத்தோற்றத்தில்

இரத்தச்செறிவுடனும் இருந்தது. பிற உடல் உள்ளுறுப்புகளில் குறிப்பிட்டு சொல்லும்படியான மாற்றங்கள் ஏதும் காணப்படவில்லை. பிரேத பரிசோதனையின் முடிவில் இறந்த நபரின் இறப்பிற்கு அவருக்கு மூளை மற்றும் கபாலத்தில் ஏற்பட்ட காயங்களால் இறந்திருக்கக்கூடும் என நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி இல்லை.**